உ
சிவமயம்.

குமரன்.

என்கடன் பணி செய்து கிடப்பதே.

துந்துபி வருஷம்.

சதங்கை க.

பத்திராசிரியர்,
சொ. முருகப்ப செட்டியார்
காரைக்குடி.

உள்ளுறை.

உ
சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்).

1923

சதங்கை க.	காரைக்குடி துந்துபி ஹு வைகாசிமீ	மணி க.

வணக்கம்.

முருகக்கடவுள்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே— ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

—நக்கீரனர்.

சிவபெருமான்.

நீண்டு சுடரானைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் றானே.

—திருநாவுக்கரசர்.

திருமால்.

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தங் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

—தொண்டரடிப்பொடியார்.

நமது குமரன்.

எங்கும் நிறைந்து எல்லாமாய் அகண்டமாய் எல்லாவுயிர்களையும் இன்பமயமாக வாழ்விக்கும் சர்வேச்வரனது திருவருளைத் துதித்து, தமிழ்நாடெங்கணும் அன்புப்பயிர் தழையத் தேவாரமாரி பொழிந்த செல்வச் சீராளரான திருஞானசம்பந்தப் பெருமானாரின் திருநக்ஷத்திரமாய இன்று நமது குமரன் வெளிவருகின்றான்.

"குமரன்" என்பது முருகக்கடவுளின் பெயர்களுள் ஒன்றாகும். குமரன் என்பதற்கு "குற்றங்களை அழிப்பவன்; அருவருப்பை நீக்குபவன்" "என்றும் இளமையுடையவன்" என்ற பொருள்கள் காணப்படுகின்றன. ஆன்மாக்களிடத்துள்ள ஆணவம் கன்மம் மாயை யாகிய மலங்களை நீக்கினாலன்றி முத்திப்பேறு கிட்டாதாதலின் அறிஞர்களா லருவருக்கப்படுகிற குற்றங்களை நீக்கி வீட்டின்பத்தை யருளுபவன் கடவுளே யாதலாலும், ஆதியும் அந்தமுமின்றி—அறியாமையும் ஆற்றாமையுமின்றி எப்போதும் வாலிபனாக—இளைஞனாகவே யிருத்தல் பற்றி அவ்விறைவனுக்குக் "குமரன்" என்ற பெயர் வழங்கப்படுகிறது. இக்குமாரக்கடவுளே, செல்வத்தாலும் பலத்தாலும் மிகுந்து தனக்கொப்பாரும் மிக்காரும் எங்கு மில்லையென்றிறுமாந்து நின்ற சூரபன்மனை அழித்துத் தேவர்க்கு (நல்லோர்க்கு) இன்பம் நல்கிய குழந்தைக்குமரன்! வேட்டுவ வுருவங் கொண்டு தமிழ் நாட்டுக் குறவள்ளியை விரும்பி மணந்த கட்டிளங் குமரன்! அன்பு நெறிபற்றம் பாண்டி நன்னாட்டை ஆண்டு பண்படுத்திய அரசிளங்குமரன்! கடிநகர் மதுரையைக் காத்தற் பொருட்டுக் கடல் சுவற வேல் விடுத்த கருணைக் குமரன்! அமிழ்தினு மினிய தமிழ்மொழி யதனை அகத்தியனுக் கருள் அண்ணலங்குமரன்! தெரிதமி முதவு சங்கப்

புலவனுங் குமரன்! நக்கீரனும் ஓரன்பன் பாடலுவந்து ஓராயிரம் பேரைக்காக்க ஒப்பற்ற வேற்படை விடுத்த வெற்றிக் குமரன்! பிரமனைச் சிறையிட்டுப் பிரணவப் பொருள் விரித்த பேராசிரியக் குமரன்! சைவ சமயப் பயிர் சோர்வடையுங்கால் ஞான சம்பந்தத் திருவுருக்கொண்டு நாடெலாஞ் சைவமணமுந் தெய்வமணமுங் கமழ்வித்த சமயாபிமானக் குமரன்! உலகெலாந் தேடிச் சிறந்த இடந் தமிழ்நாடெனக் கொண்டு இந்நாட்டை விட்டகலாது கோவில் கொண்டெழுந்தருளிய தேசாபிமானக் குமரன்! முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைக்கும் பாஷாபிமானக் குமரன்! அடியார் துயரகற்றும் அற்புதக் குமரன்! தமிழர் செல்லுமிடமெலாஞ் சென்று விளையாடுந் தெய்வக் குமரன்! ஆடு கோழிகளை அடைக்கலங்கொண்ட அருணெறிக் குமரன்! மன்றுதோறாடிய வள்ளல் காமுறக் குன்றுதோறாடிய குமரன்! எண்டிசைகளும் ஏழுலகமும் பொன்வயிற்றிற் பெய்து பண்டோராலிலையிற் பள்ளிகொண்ட மான்மருகனான குமரன்!

தமிழ் நாட்டு மக்களாகிய நம்மிடையில் குழந்தையாகவும் கிழவனாகவும், இளைஞனாகவும் கிளைஞனாகவும் ஆண்டியாகவும் அரசனாகவுந் தலைவனாகவும் ஆசிரியனாகவும் அன்பனாகவும்வேடனாகவும் வீரனாகவும் வெற்றியாளனாகவும் வந்து நமது நாட்டுக்கும் சமயத்திற்கும் பாஷைக்கும் நேர்ந்த இடுக்கண்களை நீக்கி நம்மையாட்கொள்ளுங்கருணைக்கடலான—நஞ்செந்தின்மேய வள்ளிமணாளனைத் துணைக்கொண்டு நம் நாட்டின் மரபுபற்றிக் கடவுள்திருநாமத்தையே தன்னாமமாகக் கொண்டு நமது "குமரன்" வெளிவருகின்றான்.

ஆடவர் பருவம் பலவற்றுள் பதினாறுவயதிற்குமேல் முப்பது வயது வரையுள்ள குமரப்பருவமே எல்லா வகையாலுஞ் சிறப்புடையதாகும். மக்கள் ஆண்மையடையும் பருவம் இதுவேயாகும். இதற்கு முன்னும் பின்னுமுள்ள பருவங்கள் அறியாமையாலும் ஆற்றலின்மையாலும் கழிய இப்பருவமே சாலச் சிறப்புடையதாக விளங்குகின்றது. இவ் விளமைப் பருவமாய குமரப்பருவத்

தில்தான் கரும்பாடாக் கட்டி சிறுகாலைக்கொள்வார் போல மக்கள் உடம்பைப் பெற்ற பயனை யடைதல் வேண்டுமென்பர் பெரியோர். இப்பருவத்தில்தான் கஷ்டங்களைப் பொருட்படுத்தாது எதிர்க்குங் குணமும் தைரியமும் ரோஷமும் பலமும் ஊக்கமும் பல விஷயங்களிலும் மனப்பற்றுதலும் உண்டாகின்றன. இப்பருவத்தில்தான் மனிதன் செயற்கருஞ் செயல் செய்தல் கூடும். இதனைக் கருதியே ஔவைப்பிராட்டியார் "மூப்பதாம் ஆண்டளவில் மூன்றற் றொருபொருளைத் தப்பாமல் தன்னுட் பெற வேண்டும்" என்று அறிவுறுத்தினர். தேசத் தொழிலைப் பெருக்கி உயர்நிலையடைவதற்கும், கப்பலேறிக் கடல்கடந்து வியாபாரஞ்செய்து பொருளீட்டுதற்கும், க்ஷத்திர தேயங்தாங்கிப் போர் முனை நின்று வீரங் காட்டி வெற்றி பெறுதற்கும், துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் துணையான இல்லறத் திருந்து இன்பநுகர்தற்கும், உலகமுப்பத் தருமம் நிலைநிற்கச் செய்யும் உயர்குணமுடைய உத்தமக் குழந்தைகளைப் பெற்று மகிழ்வதற்கும், தேசாபிமானம் பாஷாபிமானம் சமயாபிமானந் ததும்பிக் கரையிழந்து பிறருக்கு உபகாரஞ்செய்ய முன் வருதற்கும், உலகத்திலுள்ள பொருள்களில் ஆசை நீத்து ஞானியாக நின்று மக்கட்குத் தருமநெறி யுரைப்பதற்கும், அங்கத்தைமண்ணுக்காக்கி ஆர்வத்தை அண்ணல்பாற் செலுத்தி, பக்திச் செல்வனாதற்கும் இப்பருவமே துணைசெய்வதாதும். இம்மாதிரியான செயற்கருஞ் செயல்களைச் செய்தற்கிடமான இவ்விளமைப் பருவத்தைக் கேவலமான வயிறு வளர்த்தற்றொழிலைச் செய்து வறிதே கழியாமல், நடமாடக் கோவில் நம்பனுக்கும், படமாடக் கோயிற் பரம்பொருளுக்குந் தொண்டு புரிவதே மக்கள் கடனென்பதை உலகினர்க்குணர்த்துவதைக் கடமை யாகக் கொண்டபடியாலும், இதுகாலை மக்கள்பால் ஞானஒளி குன்றி உலகாயதம் மிகுந்து பொறாமை வஞ்சம் பிணி அடிமை தன்பயம் வறுமை கொலை யாதி குற்றங்கள் மலிந்து நிற்கின்றபடியால் அவற்றையழிபாவிடின் பக்தியும் சத்தியமும் தர்மமும் உலகில் நிலவ முடியாவாதலாலும் இரண்டு பொரு

ளையுந் தன்னகத்தே கொண்ட "குமரன்" என்ற பெயரைக் கொண்டு நமது செல்வன் வெளிவருகின்றான்.

இந்நாளில் மக்கட் கறிவுறுத்தற்கு எந்நாட்டினும் பத்திரிகைகளே பெருந்துணை புரிகின்றன. மற்றைய வெளிநாடுகளில் ஒவ்வொரு கொள்கையைப் பற்றி எண்ணிறந்த பத்திரிகைகள் பதினாயிரக் கணக்கான சந்தாதார்களைக்கொண்டு பருத்துக் கொழுத்து வாழ்ந்து மக்கட்குத் தொண்டு புரிகின்றன. நந் தமிழ்நாட்டின்கண் உண்மையாக உழைக்கும் பத்திரிகைகளோ சொற்பம். ஆசிரியர்க்கு ஏகதேசம் நல்லெண்ண முண்டாகி உழைக்க முன் வந்தால் வறுமையானது குறுக்கிட்டுத் தடுத்து நிற்பதை நாமறிவோம். நம் நாட்டு மக்கள் பத்திரிகை படிப்பதில் அத்தனை ஊக்கங் காட்டவில்லை யென்பது மிகையாகாது. இரண்டு கோடி மக்கட் கதிகமாக வுள்ள தமிழர்களிடையில் சிறந்த சமயப் பத்திரிகைகள் எத்தனை விளங்குகின்றன? இவ்விஷயம் எமது உளத்திற் சில நாளாக உறுத்திக் கொண்டிருந்தது. எனது உண்மை நண்பர்கள் பலர் இம்முயற்சியிற் றலையிடுமாறு தூண்டினர். இவைகாரணமாகக் "குமரன்" வெளிவருகின்றான்.

நமது சமயம் வளர—தமிழ்மொழி வளர—தமிழ்நாடு வளர—தொழில் வளர—வாணிபம் வளர—அறிவு வளரத் தன்னகத்தே, உயர்ந்த கட்டுரைகள்—பெரியோர் சரிதம்—பலவித ஆராய்ச்சி—இன்பக்கதைகள்—வேடிக்கை விளையாட்டான குறிப்புகள் முதலியவற்றைப் பழய—புதிய முறைகளில், எளிய—உயரிய நடையில், உரை நடை வடிவாகவும் செய்யுள் வடிவாகவும், மொழி பெயர்ப்புகளாகவும் தனிக்கட்டுரைகளாகவும், தாங்கி நமது "குமரன்" வெளிவருவான்.

ஜாதி—சமயச் சண்டைகள், அனாவசியமான விபாசங்கள், அவசியமற்ற மறுப்புக்கள், மனதைப் புண்படுத்தும் விஷயங்கள், தெய்வநிந்தை—தெய்வங்களை யலட்சியப்படுத்துகிற விஷயங்கள், முதலிய அசுத்தங்களைக் குமரன் தன்னகத்தே தாங்கமாட்டான்.

நமது குமரனுக்கு ஆங்கிலங் கற்றவர்களும் நாட்டின் நிலையை நன்குணர்ந்தவர்களும் நந்தமிழ் நாட்டுத் தவப் பயனாக விளங்குபவர்களுமான சிறந்த தமிழ்ப் பண்டிதர் பலர் கட்டுரை தந்துதவ இசைந்துள்ளார்களாதலாலும், பொருள் வருவாயைக் கருதிப் பத்திரிகை நடத்தப்பெறவில்லையாதலாலும், பணத்தின் முட்டுப்பாடு இம்மியுமில்லையாதலாலும் குமரன் தமிழ் நாட்டில் ஆனந்தத் தாண்டவம் புரிவான் என்பதிலையமில்லை. ஆனால் தமிழ் நாட்டுச் சகோதரர்கள் எவ்வளவுவரை ஆதரித்துப் படிக்கிறார்களோ அவ்வளவு வரை "குமரன்" தொண்டு செய்து வருவான்.

நமது நண்பர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தமது கட்டுரையில் "மாடர்ன் ரெவ்யூ" மாதிரி ஒரு பத்திரிகை வேண்டுமென்ற விருப்பத்தைக்காட்டி யிருக்கின்றார்கள் இந்த நோக்கத்தைப் பலர் எம்மிடங் கூறியதுண்டு. எமக்கும் அவாவுண்டு. அம்மாதிரி யொரு பத்திரிகை நடத்துவது ஒரு பெரியகாரியமில்லை. ஆனால் தமிழ் நாட்டு ஜனங்கள் அதனை யெவ்வாறு ஆதரிப்பார்களென்பதும், எத்தனைகாலம் ஆதரிப்பார்களென்பதும் அநுபவித்துப் பார்த்தே அறிய வேண்டியிருக்கின்றன. நமது குமரனிடத்தில் தமிழ் நாட்டு மக்கள் காட்டும் ஊக்கத்தில் நம்பிக்கையேற்படுமானால் அடுத்த ஆண்டில் நமது குமரன் தமிழ் நாட்டு "மாடர்ன் ரெவ்யூ" ஆவது திண்ணம். இப்போது எண்ணிக்கையில் இரண்டு கோடிக்கதிக முள்ள மக்களிடையில் நமது "குமரன்" விரும்பி நிற்பது யாது? ஒன்றே ஒன்று தான். அதாவது "ஒரு லக்ஷம்பேராவது தன்னை வரவேற்றுப் படிக்க வேண்டும்" என்பதுதான். இதை பென்னிபே கிரேஸ் காகிதம் முப்பத்திரண்டு பக்க அளவில் ஒரு சௌகரியமுமில்லாத காரைக்குடியி லிருந்து வெளிவரும் பத்திரிகைக்கு ஒன்றரை ரூபா சந்தா ஏற்படுத்தப் பெற்றிருக்கின்றது. ஆதலால் தமிழ்நாட்டு ஆடவர் மகளிர் வாலிபர் மாணவர் முதலிய ஒவ்வொருவர் கையிலும் மடியிலும் நமது குமரன் கொஞ்சிக் குலாவி விளையாடி இம்மை மறுமை யின்பத்தை யூட்டுவானென்று நம்புகிறோம்.

முருகன்.

சென்னை

ஸ்ரீமாந், திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதியது.

கல்கத்தாவில் நடைபெற்று வரும் "மாடர்ன் ரெவியூ" என்னும் மாதாந்த பத்திரிகை போன்ற ஒரு மாதாந்த பத்திரிகை தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் நடைபெற வேண்டுமென்று நீண்ட காலமாக எண்ணிக் கொண்டிருந்தேன். இதுபோழ்து காரைக்குடியில் ஸ்ரீமான், சொ. முருகப்ப செட்டியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு "குமரன்" என்னும் ஒரு தமிழ் மாதாந்த பத்திரிகை வெளிவருவதைக் கேட்டுப் பெரு மகிழ்வெய்தினேன். "குமரனை" ஆசிரியர் தமிழ்நாட்டின் நலத்துக்கெனப் பயன் படுத்துவாரென்று எதிர்பார்க்கிறேன். நாட்டுக்கோட்டை நகரச் செட்டியார் ஒருவரால் "குமரன்" நடத்தப்படுதலால், அப்பத்திரிகை கல்கத்தா "மாடர்ன் ரெவியூ" போலத் தமிழ்நாட்டில் பொலிந்து, தமிழ்நாட்டின் பழமையை விளங்கச் செய்யுமென்று உறுதியாக நம்புகிறேன். ஆசிரியர் பெயர்க்கும் பத்திரிகைப் பெயர்க்கும் உற்ற தொடர்பு நோக்கி முதல் முதல் "முருகன்" என்னுங் கட்டுரை எழுதப் புகுகிறேன்.

முருகன் எவன்? முருகையுடையவன் முருகன். முருகு என்றால் என்னை? முருகு என்னுஞ் சொல் பல பொருள் குறிக்கும் ஒரு சொல். முருகு என்னுஞ் சொல்லில் சிறப்பாக நான்கு பொருள் அடங்கியிருக்கின்றன. அவை மணம் இளமை கடவுள் தன்மை அழகு என்பன. இந்நான்கு பொருளடங்கிய ஒரு சொல்லால் பண்டைத் தமிழ்மக்கள் முழுமுதற் பொருளை அழைத்தது கவனிக்கற்பாலது. இயற்கை மணமும், மாறா இளமையும், எல்லாப் பொருளையுங் கடந்தொளிருந் தன்மையும், அழியா அழகும், இறைவனிடத்தில் இலங்குவது கண்டு, அப்பொருள்கள் முறையே உறைதற்கிடம் பெற்றுள்ள முருகன் என்னுஞ் சொல்லை, ஆண்டவ

னுக்குச் சூட்டியதன் திறமை நோக்குழி, பழந் தமிழ்மக்களின் கூர்த்தமதியை என்னென்று வியந்து பாராட்டுகிறது? உலகத்தின் நாலு பக்கங்களிலும் வாழ்ந்து வரும் மக்கள், தங்கள் அறிவாற்றலுக்கேற்றவாறு, தங்கள் மொழியில் கடவுளுக்குப் பலதிறப்பெயர்கள் சூட்டியிருக்கிறார்கள். அப்பெயர்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிறப்புப் பொருள் விளங்குகிறது. சிலவற்றில் பொருத்தமில்லாத பல பொருள் விளங்குகின்றன. முருகன் என்னுஞ் சொல்லிலோ அறிஞர் போற்றும் பொருள்கள் மிளிர்தல் காணலாம். ஆதலால் அறிஞர் போற்றற்குரியதும், மகிழ்ச்சி தரக்கூடியதும், பொருத்தமுடையதுமாக இருப்பது முருகன் என்னுந் திருப்பெயர். மணமுடைமை, இளமையுடைமை, கடவுள்தன்மையுடைமை, அழகுடைமை ஆகிய இவைகளைப் போற்ற மறுப்போர் முருகனைப் போற்ற மறுப்பர். மணமுடைமை முதலிய நான்கினையும் போற்ற மறுப்போர் இரும்பு மனமும் வன்கண்மையுமுடைய முரடராயிருப்பர். இரக்கமில்லா உள்ளத்தில் முருகு அலர்தல் அருமை.

இனி, மணம், இளமை, கடவுள்தன்மை, அழகு என்னும் நான்கு பொருளில் சிறப்பாக அழகு என்பதை நான் எடுத்துக் கொள்கிறேன். அழகு உள்ள இடத்தில் ஏனைய மூன்றும் விரவி நிற்கும். அழியா அழகில் மணமும் இளமையும் கடவுள்தன்மையும் கலந்து நிற்றல் இயல்பு. அழியாஅழகு என்று ஈண்டுக் குறிப்பிட்டது கருதற்பாலது. கைபுனைந்தியற்றா அழகே அழியா அழகெனப்படும். கைபுனைந்தியற்றும் அழகு அழியுந் தன்மையது. "கைபுனைந்தியற்றாக் கவின் பெறும் வனப்பு" என்றார் நக்கீரனாரும். கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செய்யப்படாதது இயற்கை. மலையும் ஆறும் காடும் கடலும் எவர் கரத்தால் ஆக்கப்பட்டவை? அவை எக் கருவிகளால் செய்யப்பட்டவை? எவர் முயற்சியால் ஞாயிறு ஒளி வீசுகிறது? திங்கள் நிலவு பொழிகிறது? கோள்கள் மின்னுகின்றன? நீரிற்குத் தண்மை தந்தவர் எவர்? நெருப்புக்கு வெம்மையூட்டினவர் யாவர்? ஆ! ஆ!! இயற்கையின் ஆற்றல் என்னே! என்னே!!

இயற்கையின் ஆற்றல் ஒருபால் கிடக்க, அதன் ஆற்றலினும் அதன் அழகே உள்ளத்தைக்கவர்ந்து இன்பமூட்டுகிறது. இயற்கை அழகில் கருத்தைப் பதியவைத்துள்ள ஒருவன், அதனோடு புணருந்தோறும் புணருந்தோறும் அவனுள் கிளர்ந்தெழும் இன்பம் பேரின்பமாகும். இவ்வின்பத்துக்கிணையாக மற்றுமோர் இன்பமுளதோ? இவ்வின்பத்தையன்றோ சுந்தரர் நுகர்ந்தார்? மாணிக்கவாசகர் பருகினார்? இவ்வின்ப ஊற்றைத் திறக்கத் தக்க அழகு இயற்கை வாயிலாகக் காணக்கிடக்கிறது. அவ்வழகே அழியா அழகு. அதுவே முருகென்னும் பேரழகு. பண்டைத் தமிழ் மக்கள் இயற்கைவழி வாழ்வைச் செலுத்தி, அதற்கு அடிப்படையாகவுள்ள இறைவனுண்மை கண்டு, அவனழகால் இயற்கை அழகு பெறுவது நோக்கி, அவ்விறைவனை அழகன் என்னும் பொருள்பட முருகன் என்னும் பெயரால் அழைத்தார்கள். இவர்கள் இயற்கை வாயிலாக முருகனைக் கண்டு நுகர்ந்த இன்பத்தைக் கலித்தொகை பத்துப்பாட்டு, திருக்கோவையார் முதலிய நூல்களில் காணலாம்.

முருகன் மலையாக நின்றும், ஆறாக ஓடியும், காடாக விளங்கியும், கடலாக ஒலித்தும், உடலாக உடனிருந்தும் உயிர்களை ஓம்பி வரும் திருவருட்டிறத்தை எவரே புகழவல்லார்? எம்பெருமான் நீலக்கடலில் காலையில் நெருப்புப் பிழம்பு போல ஞாயிறாகப் புறப்பட்டு உலகுக்குத் தராவிடின், உலகம் என்ன பாடு படும்! அவன் திங்களாக அமுதம் பொழிந்து உலகுக்கின்பமூட்டுவதை உணராத புலன்களும் புலன்களாமோ? முருகன் இயற்கை வாயிலாக ஆடிவரும் திருவிளையாடல்களை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

இயற்கை வாயிலாக முருகு என்னும் அழியா அழகைக் கண்டவர்பால் என்றும் மணமே கமழ்ந்து கொண்டிருக்கும். அவர்மீது புலால் மணங் கமழாது. அவர் மணத்துக்கென வேறு செயற்கை வாசனைகளைத் தேடவேண்டுவதில்லை. இயற்கை மணம் அவர்மீது என்றும் நீக்கமின்றி வீசும். இயற்கை மணம் வீசப்பெறுவோர் என்றும் இளமையுடையரா யிருப்ப

என்றும் இளமை யுடையவராக வாழவிரும்புவோர் எம்பெருமான் முருகனை எப்பொழுதும் நினைந்த வண்ணமாயிருப்பாராக. இயற்கைக்குக் காரணமாக உள்ள முருகு என்றும்இளமையா யிருப்பதால், இயற்கைப் பொருள்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே ஆற்றுகின்றன. முருகின் இளமை குன்றுவதாயின், இயற்கையும் தன் செயலில் குன்றும். ஆனால் இயற்கை எத்துணை காலம் எவ்வெவ்வழியில் தொழிற்படினும், அஃது இளைத்துச் சலித்துச் சாய்வதில்லை. என்னை? காரணமாகவுள்ள முருகு என்றும் இளமையாயிருப்பதால், காரியமாகிய இயற்கையும் என்றும்இளமை என்னும் வளமை குன்றாமல், ஒரு பெற்றியாய்த் தன் செயலைச் சலிப்பின்றிச் சாய்வின்றி நடாத்திக்கொண்டு போகிறது. ஆதலால் இயற்கைவழி முருகைக் காண்போன் என்றும் இளையனாயிருப்பன். மலைக்கிழங்கை உண்டும், காட்டுப்பழங்களைத் தின்றும், வயல்தானியங்களைப் புசித்தும், கடல்காற்றைப் பருகியும் வாழ்வோரை விரைவில் முதுமை அணுகாது. இயற்கைப் பொருள்களைத் தங்கள் விருப்பப்படி வேறு பல பொருளோடும் புலாலோடும் கலந்து வேகவைத்துப் பதஞ்செய்து விலாப்புடைக்க உண்பதிலேயே காலங்கழிக்கும் மனிதர்களை விரைவில் முதுமை அடர்ந்துவருத்தும். இயற்கை மணமும் மாறாஇளமையும் உடைய ஒன்று தத்துவத்தில் கட்டுப்பட்டுக் கிடக்காது. அது தத்துவங் கடந்த தனிப்பொருளாய்—கந்தழியாய் இலங்கும். ஆதலால், கடவுள்தன்மை மணமும் இளமையும் உடைய முருகனிடத்தில் இயல்பாகவே அமைந்துகிடக்கிறது. மணமும் இளமையும் கடவுள்தன்மையும் ஆகிய இம்மூன்று முடைய ஒன்றன் அழகை எழுத்தால் எழுதமுடியுமோ?

முருகன் என்னுஞ் சொல்வழக்கு எந்நாளில் உண்டாயிற்று என்று உறுதியாகக் கூறமுடியவில்லை. ஆராய்ச்சிக்காரர் இற்றைக்குச் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே முருகன் என்னுஞ் சொல் ஆட்சியிலிருந்தது என்று கூறுப. இன்னும் அம்மொழி இறந்துபடவில்லை. முருகனைப் போற்றுவோர் இன்னும்

உளர். என்றும் மாறா இளமையுடைய முருகன் தொன்மை மிகுந்த பெருங்கிழவன் போலும்! தமிழ்மக்கள் முருகனை மலைநிலக் கடவுளாகக் கொண்டதொன்றே, அப்பெருமானின் தொன்மையை நனிவிளக்கும். ஆசிரியர் தொல்காப்பியனார் உள்ளிட்ட பல்லோர் "சேயோன் மேய மைவரை யுலகம்" என்றும் "குறிஞ்சிக்கிழான்" என்றும் "மலை கிழவோனே" என்றுங் கூறிப்போந்தனர். தமிழ்மக்கள் வாழ்வு முதல் முதல் தொடங்கப்பட்ட இடம் மலையேயாகும். அவர்கள் ஆண்டிருந்து பிற நிலங்களுக்குப் பின் போந்தார்கள். மலையில் வாழ்ந்தமக்கள், பின் பிறநிலங்களில் குடிபுகுந்து, அவ்வந் நிலங்களின் இயல்புக்கேற்ற கடவுளர்களைக் குறித்துக் கொள்ளினும், முதல் முதல் தாங்கள் கொண்ட மலைநிலக் கடவுளாகிய முருகனையே அவர்கள் தங்கள் குலதெய்வமாகப் போற்றுவாராயினர். தமிழ்க்கடவுள் என்பது முருகனுக்கே சிறப்பாக வழங்கப்படுகிறதன்றி ஏனையநிலக்கடவுளர்க்கு அப்பெயர்வழங்கப் படுவதில்லை. தமிழ்மக்கள் வாழ்வு என்று மலைநிலத்தில் துவங்கப் பட்டதோ, அன்றுதொட்டு இன்றுவரை முருகன் தமிழ்நாட்டுத் தெய்வமாகப் போற்றப்பட்டு வருகிறான். இன்னும் அவன் இளையனாகவே இருக்கிறான்; பின்னும் என்றும் அவ்வாறிருப்பன். அவன் அழகன்றோ அழகு.

எங்கணும் இயற்கை வடிவாக நீக்கமற நிறைந்துள்ள இறைவனும் முருகனை வழிபட்டுய்யும் பொருட்டு, மெய்யடியார்கள் பலவிடங்களில் முருகக்கடவுளுக்குத் திருக்கோயில்கள் கட்டினார்கள். அக்கோயில்களில் முருகன் வீற்றிருந்தருளுவதோடு, ஒவ்வொரு சிவாலயத்திலும் அப்பெரியோன் வீற்றிருந்தருள்கிறான். முருகன் திருவுருவை வழிபடுவோர், அவர் விரும்பும் எல்லா நலங்களையும் பெறுவர். முருகன் மக்கட்கு இன்றியமையாத அருட்செல்வம் பொருட்செல்வம் முதலிய எல்லாச் செல்வங்களையும், அளிப்பன். முருகப்பெருமான் தன்னைவழிபடும் அன்பர்கட்குத் தோன்றாத்துணையாக நின்றுசெய்துவரும் பேருதவி, அவன் அடியவர்க்குத் தெரியும். நம்பிக்கையால் முருகனிடத்து எல்லாம் பெறலாம்.

பண்டைக்காலத் தமிழ்மக்கள் பெரிதும் மருந்தையும் வயித்தியனையும் நாடி ஓடினார்களில்லை. மருந்தும் வயித்தியனும் முருகனே என்று அவர் கருதிவந்தனர். அவ்வழக்கம் இன்றும் பலவிடங்களில் ஆட்சியிலிருக்கிறது. தமிழ்மக்கள் நோயால் பீடிக்கப்படும்போதும், வேறுபல குறைகளால் வருந்தும்போதும் முருகனை நோக்கி வேண்டுதல் செய்து அவன் திருக்கோயில் சென்று, தொண்டு புரிந்து நோயும் குறைகளும் நீங்கப் பெறுவர். முருகக் கடவுள் எழுந்தருளியுள்ள திருத்தணிகை, திருப்போரூர், திருமயிலம், திருவாவினன்குடி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் முதலிய திருப்பதிகளில் மக்கள் நம்பிக்கை மேலீட்டால் செய்யுங் காரியங்களை இன்றுங்காணலாம். நம்பிக்கை விசுவாசத்தால் எல்லாக்காரியங்களுஞ் செய்யலாம். இதைப்பற்றிக்கிறிஸ்துநாதர் மிகத் திறம்பட உலகிற்கு அறிவுறுத்தி யிருக்கிறார். இந்நாளில் பேய்நாகரிகத்தால் நம்பிக்கை என்பது இறந்துபட்டு வருகிறது. நம்பிக்கை ஒழிந்து வருவதால், பிரார்த்தனைகளுங் கைகூடுவதில்லை. "பெந்தகோஸ்தே" சபையில் சேர்ந்த பல்லோர் அமெரிக்கா முதலியவிடங்களில் கடவுளை நோக்கி ஜெபஞ்செய்து நோய்களைத் தீர்த்து வருவதைச் சஞ்சிகைகளில் நம்மவர்கள் படித்து மகிழ்ச்சியடைகிறார்கள். நோயாளியிடத்தும் ஜெபஞ்செய்வோரிடத்தும் நம்பிக்கை பூரணமாக இருத்தல் வேண்டும். இல்லையேல் விரும்பியது நிறைவேறாது. நம்பிக்கையால் மனிதன் தேவனாகலாம்.

நம்பிக்கை யில்லாதார் நோய்வாய்ப்படும்போது மருந்துகளையும் வைத்தியனையும் கட்டி அழுது கொண்டிருப்பர். பண்டைக்கால மக்கள் மன உறுதியால், முருகனை வழிபட்டுச்செயற்கருஞ் செயல்கள் செய்திருக்கிறார்கள். முருகனை வழிபட்டு நம்பிக்கையால் செயற்கருஞ் செயல்களைச்செய்யும் ஆற்றலை நாட்டில் வளர்க்க ஆங்காங்குற்ற சமயச் சங்கங்கள் உழைத்தல் வேண்டும். இப்பொழுது கிறிஸ்தவர்கள் நம்பிக்கை வித்தையால் தங்கள் மதத்தைப் பரப்ப முயன்று வருவதை நேயர்கள் கவனித்து வேண்டுவ செய்வார்களாக. அந்த நம்பிக்கை வித்தையைக் கண்ணுற்று

விபப்படையும் நம்மவர்கள், முருகனை வழிபட்டு நம்பிக்கையால் செயற்கருஞ் செயல்கள் செய்து, பெறற்கரிய பேறுபெற்ற வரலாறுகளை வாசித்து உண்மை உணர்வார்களாக. நமது நாட்டுத் தற்கால மூதறிஞர்கள், நம்பிக்கையால் முருகனை வழிபடும் அடியார்கள் மனத்தே உறுதியைக்கெடுக்க முயற்சி செய்யா திருப்பார்களாக. முருகப்பெருமானை வழிபட்டு நம்பிக்கையால் குணமடைந்தவர் சரிதங்கள் எண்ணிறந்து கிடக்கின்றன. அவைகளை விரிக்கிற் பெருகும். இன்னும் நம்பிக்கை உடையார் குறைகளை முருகன் நிவர்த்தி செய்து வருகிறான். இனிப்புராணங்களில் முருகக்கடவுள் வரலாறு ஓதப்பட்டிருப்பதைக் குறித்துச்சில உரைகூறி இக்கட்டுரையை முடித்து விடுகிறேன். முருகன் திருவிளையாடல்களைக் கூறும் புராணங்கள் பல. அவைகளுள் தலையாயது கந்தபுராணம். அதிலுள்ள கதையை ஆராய்ந்தாலும் முருகன் இயற்கைக்காரணன் என்பது புலப்படும். முருகன் சிவபெருமான் திருக்கண்களினின்றும் தோன்றி, வாயுவாலும், அக்னியாலும் காக்கப்பெற்று, சரவணப்பொய்கையில் குழந்தையாகி, பூமியில் திருவிளையாடல் புரிந்தான் என்று புராணங்கூறுகிறது. இதனை ஆராய்ந்தால் முருகன் மண் புனல் தீ வளி வெளி என்னும் ஐந்து பூதங்கட்கும் காரணன் என்பது புலனாகும். சிவம்—வெளி; வாயு அங்கியங்கடவுள் முறையே காற்று தீ; சரவணப்பொய்கை—புனல்; பூமி—மண் இவ்வுண்மைகண்ட கச்சியப்ப முனிவர் தமது தணிகைப் புராணத்தில்,

ஓங்கொளியாய் விசும்பாதி தொறுமியலுந் தனதியல்பை
உருவின் மாட்டும்
பாங்குபெறத் தெரித்ததுபோற் பலபொறியாப் பாமர்விழி
பயந்த ஞான்று
தேங்கொளியாய்வெளியடர்ந்து வளிதொடர்ந்தொள் ளொளிபடர்ந்து
தெளிநீர்ப் புக்கு
வேங்விளை யாட்டயர்ந்த தணிகையமர் பெருவாழ்வை
நினைந்து வாழ்வாம்.

என்று முருகனைப் போற்றியிருப்பது ஈண்டு சிந்திக்கற்பாலது. இச்செய்யுட்களிலுள்ள நுட்பம் அறிஞர் கருத்தை ஈர்க்கும்.

முருகக்கடவுள் ஆறுமுகங்கொண்டது, வேல்தாங்கியது, சூரர்களைத் தடிந்தது, இருமாதர்களை மணந்தது முதலிய வரலாறுகளிலுள்ள உண்மைகளைக் குமார தந்திரம், கந்தபுராணம், திருப்புகழ், சுப்பிரமணிய பராக்கிரமம், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் பிரபந்தங்கள் முதலிய நூல்களிற்காண்க. ஆறுமுகம்—பிரணவத்தோடு கூடிய பஞ்சாக்கரம். சூரர்கள்—ஆணவம் கன்மம் மாயை. வள்ளி—இச்சாசக்தி. தெய்வயானை—கிரியாசக்தி. வேல்—ஞானசக்தி. முருகனுடைய இச்சையால் கிரியையால் ஞானத்தால், மக்களிடத்துள்ள இச்சையும் கிரியையும் ஞானமும் கூர்ந்து விளங்கவேண்டுமாதலால், அவன் முறையே மூன்றற்கும் அறிகுறியாக வள்ளிதெய்வயானை வேல் என்னும் மூன்று சக்திகளையுந்தாங்கியுள்ளான். முருகனை வழிபடுவோர் இம் மூன்றும் விளங்கப் பெறுவர். முருகன் வழிபாடு இப்பொழுது குறைவுற்றுள்ளமையால், மக்கள் இச்சை கிரியை ஞானம் விளங்கப்பெறாது வறுமை முதலிய சிறுமைகளுக்கு அடிமைப்பட்டு இடர்ப்படுகிறார்கள்.

சிவபெருமானை வழிபட்டு நால்வர் தமிழ்வேதம் பாடினர். திருமாலை வழிபட்டுப் பன்னிருவர் தமிழ்வேத மோதினர். முருகனை வழிபட்டு அருணகிரிநாதர் தமிழ்வேத மருளினர். வாக்கிற் சிறந்த அருணகிரிநாதர் அருளிய திருப்புகழை ஓதும்போதும், பிறர் ஓதக்கேட்கும்போதும், முருகக்கடவுளின் நுண்ணிய உருவம் அகத்தில் புலனாவதுபோன்ற ஒரு தோற்றமும், ஒருவித அன்பும் நிகழ்வதைக் காணலாம். இக்காலத்துப் பாவலராக இலங்கிய நமது சுப்பிரமணியபாரதியார் முருகக்கடவுளைப்பற்றிப் பாடியபாடல்களிலும் முருகைக் காணலாம். விரிவஞ்சி இவ்வளவில் நின்றுவிடுகிறோம்.

தமிழ்மக்களே! முருகன் எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நின்று, அவைகளை அழகு செய்வதை உங்கள் முன்னோர்கள் கண்டு இன்புற்றார்களல்லவா! அவ்வின்பத்தினை இப்பொழுது நீங்கள் நுகர்கிறீர்களா? இயற்கை, முருகன் வடிவாயிருப்பது மின்

கட்டுப்படுகிறதா? முருகனைக்காண முயலுங்கள். அவன் செந்நெறியை ஓம்பினால் அவனைக்காணலாம். முருகனுக்கு ஏராளமான கோயில்களிருக்கின்றன. இனிப் புதிதாகக் கோயில்கள் கட்டுதல் வேண்டாம். எங்கும் நிறைந்துள்ள அவனுக்கு எக்கோயிலும் வேண்டாம். அவன் செந்நெறியை வளர்க்கச் சபைகள் காணுங்கள்; அவன் பெயரால் பத்திரிகை நடத்துங்கள்; பாடசாலை அமையுங்கள்; திருப்புகழைப் பொருளுணர்ந்து ஓதுங்கள்; இயற்கையிலுள்ள அவனழகை நூல்களாக எழுதுங்கள்; போலி ஞானம் பேசி முருகனிடத்துள்ள அன்பை—நம்பிக்கையை—மனவுறுதியைக் கெடுத்துக் கொள்ளாதேயுங்கள்; முருகன் பெயரால் பிணியை ஓட்ட முயலுங்கள்; நம்பிக்கை மதத்தை வளருங்கள்; முருகன் திருவருளால் கட்டுகளை அறுத்துக் கொள்ளுங்கள். பூரண அழகு உங்கள்பால் பொலியும்.

ஸ்ரீ விவேகாநந்தருடன் சம்பாஷணை.

(ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் மொழி பெயர்த்தது)

(ஸ்ரீவிவேகாநந்த ஸ்வாமிகளுடன் அவருடைய பிரிய சிஷ்யர்களிலொருவராகிய ஸ்ரீ சரதச் சந்திர சக்கிரவர்த்தி பி. ஏ. அவர்கள் செய்த சம்பாஷணைகளில் சிலவற்றை தமது தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்திருந்து வெளியிட்டிருக்கிறார். அதில் பின் வருவது ஒன்று)

சிஷ்யர்:—ஸ்வாமிஜி, தாங்கள் ஏன் இந்த தேசத்தில் பிரசங்கம் செய்கிறதில்லை? தாங்கள் தங்கள் பிரசங்கங்களினால் ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் கலக்கியிருக்கிறீர்களே, ஆனால் இங்கு திரும்பிவந்தபின் மௌனமாயிருக்கிறீர்கள்.

ஸ்வாமிகள்:—இந்த தேசத்தில், முதலில் நிலம் தயாரிக்கப்படவேண்டும். பின்னர் விதை விதைக்கப்பட்டால், செடி மிக

மிகச் சிறந்ததாகக் கிளம்பும். மேனாட்டிலே, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நிலம் மிகவும் செழிப்புள்ளதாயிருக்கிறது விதை விதைப்பதற்கு ஏற்றதாயும் இருக்கிறது. அங்கே அவர்கள் போகத்தின் உச்சியை யடைந்துவிட்டார்கள். பரிபூரணமாக போகம் அனுபவித்து திருப்தியுற்றவர்களா யிருக்கிறபடியால் அவர்களுடைய மனம் இந்த போகங்களில் கூட இப்பொழுது சமாதானமடைகிறதில்லை. இந்த தேசத்திலே உங்களிடம் போகமுமில்லை, யோகமுமில்லை. மனிதனுக்கு போகத்திலே திருப்தி யுண்டானாலதான், அவன் யோகோப தேசங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வான். வியாதி துக்கம் துன்பம் இவற்றுக்குப் பிறப்பிடமாயும் மனிதர்கள் பட்டினி கிடந்ததினால் சரீரம் தளர்ந்தும் மனம் பலவீனமாயும் இருக்கிற இந்தியா போன்ற ஒரு தேசத்தில் பிரசங்கங்களினால் என்ன நன்மை செய்யமுடியும்?

சிஷ்யர்:—ஏன் அப்படி? மதப்பற்றுள்ளபூமி நம்முடையதே யென்றும் இங்கு ஜனங்கள் மற்ற இடங்களில் பார்க்கிலும் மதத்தை நன்றாக அறிந்துகொள்ளுகிறார்களென்றும் தாங்கள் சொல்வதுண்டே! அப்படியானால், தங்கள் அருள்வாக்கின் உத்வேகத்தினால் புத்துயிர்பெற்று அதன்பலன்களை ஏன் இந்ததேசம் நிரம்பவும் அளிக்ககூடாது?

ஸ்வாமிகள்:—இப்பொழுது, மதமென்றால் இன்னதென்று தெரிந்துகொள்வாய். அவச்யமாக முதலில் வேண்டியது கூர்மாவதாரபூஜையாகும்; வயிற்றுக்கடவுளே இந்த கூர்மமாம் (ஆமை) நீ இதை சாந்தப்படுத்துகிற வரையில் நீ மதத்தைப்பற்றிச் சொல்லும் வார்த்தைகளுக்கு எவரும் நல்வரவு அளிக்கமாட்டார்கள். இந்த பசிப்பேயை எதிர்த்து நிற்பது எப்படி யென்ற நினைப்பினால் இந்தியா அமைதியற்றுக் கிடக்கிறது. தேசத்தினுடைய மிக மிகச் சிறந்த வளங்களை யெல்லாம் அந்நியர் ஆகருஷித்துச் செல்லுதல், வியாபாரப்பொருள்கள் தடையற்றுவெளியேகொண்டு போகப்படுவது, எல்லாவற்றுக்கும் மேலாக, வெறுக்கத்தக்கதும்

இவை இந்தியாவின் எலும்புகளுக்குள்ளும் சதைக்குள்ளும் நுழைந்து நின்றுகொண்டிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் முதலில் நீங்கள் யாருக்கு மதத்தை போதிக்க விரும்புகிறீர்களோ அவர்களிடமிருந்து பசியும் பட்டினியுமாகிற இந்தத் தீமையை, உயிர் இருந்தால் போதுமென்பதற்குள்ள இந்த இடைவிடா நினைப்பை அகற்ற வேண்டும்; இல்லையேல், பிரசங்கங்களும் அவை போன்ற விஷயங்களும் ஒரு பயனையும் தாரா.

சிஷ்யர்:—அப்படியானால், அந்தத் தீமையை யகற்றுதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

ஸ்வாமிகள்:—முதலில், சில வாலிபர்கள்— தியாகவுணர்ச்சி நிரம்பியவர்கள்—தங்கள் சொந்தசுகத்தை நாடுவதிலேயே காலத்தைக்கழிக்காமல், பிறருக்காக தங்கள் ஜீவிதங்களைத் தியாகம் செய்யத்தயாராயுள்ளவர்கள்—வேண்டும். இந்த நோக்கத்துடனே வாலிப சந்யாசிகளைப் பயிற்றுவிக்கும் பொருட்டு நான் ஒரு மடம் ஸ்தாபிக்கப்போகிறேன். அவர்கள் வீட்டுக்கு வீடுசென்று, விஷயங்களை யெடுத்துரைத்தும் நியாயம் காட்டியும் ஜனங்கள் தங்கள் பரிதாபகரமான நிலைமையை உணரும்படி செய்வதுமன்னியில், அவர்களுக்குக் கூடியமட்டும் தெளிவாக, மிகவும் எளிய, சுலபமான பாஷையில் மதத்தினுடைய உயர்ந்த உண்மைகளையும் எடுத்துரைப்பார்கள். நமது தேசத்தில் பெரும்பான்மை ஜனங்களும் உறங்கிக்கிடக்கிறார்கள். தற்கால சர்வகலாசாலை முறையினால் அளிக்கப்படும் கல்வி பொது ஜனங்களில் நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டு பேருக்குத்தான் கிடைக்கிறது. அக்கல்வியை யடைபவர்களும் தங்கள் தேசத்துக்கு ஏதேனும் நன்மை செய்யலாமென்று முயற்சித்தால், ஜயமடைகிறதில்லை. ஆனால், அந்தோ! அது அவர்களுடைய குற்றமன்று. அவர்கள் கலாசாலையிலிருந்து வெளிவந்தவுடனே தாங்கள் பலகுழந்தைகளுக்குப் பெற்றோரா யிருக்கக்காண்கிறார்கள்! எப்படியாவது, அவர்கள் ஒரு குமாஸ்தா அல்லது ஒரு உப-நியாயாதிபதி (டிப்டி மாஜிஸ்டிரேட்) யினுடைய உத்யோகத்தைப் பெற்றுவிடுகிறார்கள். இதுதான் வித்தையின் முடிவு போலும்! முதுகின்மீது ஒரு குடும்பச் சுமையைச் சுமக்க வேண்டும்படி வந்துவிட்டதால், உயர்ந்ததாக எதையேனும்செய்ய, அல்லது உயர்ந்ததாக எதையேனும் நினைக்க அவர்களுக்கு நேரமில்லை. அவர்களுக்குத் தங்களுடைய விருப்பங்களையும் நலங்களையுமே நிறைவேற்றிக்கொள்வதற்குப்போதுமான உபாயங்களில்லையே? அப்படியிருக்க, அவர்கள் பிறருக்காக ஏதேனும் செய்வார்களென்று எப்படி எதிர்பார்க்கக்கூடும்? (தொடரும்)

தில்லைத் தாமரை.

(பூங்குடி அழகனார் எழுதியது.)

பூ உலகில் தலை சிறந்து விளங்குவது யாது? இருவர் சிந்திச் செய்ய தாமரை மலரே யாகும். எனெனில் இயற்கையாகவே வடிவத்தில் மற்ற புட்பங்களைக் காட்டிலும் பெரிதாய் நீரில் கொடியிலே வளர்ந்து மிளிர்கின்றது. அன்னம், அன்னமாய அயன், கலைமகள், திருமகள் முதலியோ ரெல்லாம் வீற்றிருத்தற்கு உறைவிடமாக இருக்கின்றது. இதனாலேயே, செந்தமிழ்ப் பாவாணர்களெல்லோரும், தத்தம் நூல்களிலே தாமரை மலரை வியந்து ஓதியிருக்கின்றார்கள். "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" என்று புகல்கின்றார் சிவப்பிரகாசர். "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்றே நாவுக்கரசரும் நவில்கின்றார். இவ்வழகிய நறுமலர் ஒன்று, தேனூறும் மலர்ச் சோலைத் திருத்தில்லை வனத்திலே அணிப்பொன்னம்பலமாய தாமரைத் தடாகத்தின் கண்ணே, ஆனந்தமாய் ஆடிக்கொண்டிருக்கும் அழகிய அரவிந்தக் கொடியில் அலர்ந்திருக்கின்றது. இதன் நறுமணம் அகிலாண்ட கோடிகளுக்கு அப்பாலும் கமழ்ந்து கொண்டிருக்கின்றது.

இப் பூவுலகிலுள்ள தாமரைப் பூவையும் இதனையும் ஒப்பநோக்கி ஆராயுங்கால், இஃது பல்லாயிரம் வகையானும் பரிந்து, "ஆ!" என ஆச்சர்ய முற்றுக் கொள்ளத் தக்கதாயும், மற்றவை, "பூ!" என்று ஊதித் தள்ளத்தக்கனவாயும் உள்ளன. எனெனில் அம்மலர்கள் மழைக்கோளைத் துதித்துக்கொண்டு மாதிரத்தை (ஆகாயம்) நோக்கிய வண்ணமாய் அண்ணாந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்நளினமோ, இந்நானிலவளாகத்திலுள்ள நம்மை [illegible]டன் நாடிய வண்ணமாயிருக்கின்றது.

முன்னையது இந்நிலவுலகிலுள்ள நீரில் வளர்வது; மழைக்கோளையும் செங்கதிரையும் எதிர் பார்ப்பது; வாட்டமுங் கோட்டமு முள்ளது. ஆதியும் அந்தமுமுள்ளது பின்னையது சிதாகாசத்தில் வளர்வது; ஒன்றற்கும் ஒருவரையும் எதிர்பாராது, தான் மட்டும் எல்லாராலும் எதிர் பார்க்கப் பெறுவது; வாட்டமும் கோ

ட்டமு மில்லாதது; ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி மயமாயது.

முன்னையது சிற்றின்பத் தேனையும், சிறுமணத்தையும், சிற்றொளியையும் நல்குவது; முட்டாட்டாமரையுமாகும். (முள் + தாள் + தாமரை) பின்னையது இடையறாப் பேரின்பத் தேனையும், பெருஞ்சிவ மணத்தையும் பேரொளியையும் நல்குவது; முள்ளிலாதது. முன்னையது அறிவிலாதது; காலையில் அலர்ந்து மாலையில் அழிவது. அதன் கொடி, இலை, தேன், அது வளர்ந்த தடாகம் அதனை வைத்து வளர்த்தோர், காப்போர், அநுபவிப்போர் எல்லோரும் ஒருகாலத்தில் அழிவு பெறக்கூடியவர்கள். மற்றும் இவ்வுலகமே அழியக்கூடியது. ஆகலான் அழியக்கூடிய பொருளினால் வரும் இன்பமும் அழியுந்தகையதாம். ஆனாற் பின்னையது அறிவு மயமாயுள்ளது; ஞானக்கடல்; ஊழிகாலத்தும் அழிவில்லாது, வாட்டமிலா மாணிக்க வாசகம் புனையப்பெற்று உலகெலாம் மன்னிமணப்பது.

முன்னையதில் தினையளவு தேன்தான் இருக்கின்றது. மற்றும் அதனைப் பருகுவதற்கு, அளியினங்களெல்லாம் ஆர்த்துக்கொண்டு பறந்து வந்து, விரைந்து அதன் மேல் அமர்ந்து, அதனை மூக்கினுற் கிளைத்து, அதிகஷ்டப்பட்டு அதிலுள்ள தேனைப் பருகுகின்றன. ஆனால் பின்னையதில் இருக்கின்ற தேனோ அளவிடுதற்கரியது. அரிய சுவையுடையது. மற்றும் இது இப்பூவுலகை நோக்கிக்கொண்டு, ஆனந்தத் தேனை, இடையறாது அளவின்றிப் பொதுவிற் சொரிந்து கொண்டிருத்தலால் இதனை எளிதில் யாவரும் பருகலாம். பருகப் பருகத் தெவிட்டாதது. பருகினோர் பசி தீர்ப்பது. உண்ண உண்ணக் குறையாது, ஒப்வின்றி ஊறிக்கொண்டே யிருப்பது. தேவார திருவாசகமாந் திருநெறித் தமிழ்மறை மணங்கமழ்வது. மற்றும் முன்னையதிலுள்ள தேன், நாவின் நுனியில் இருக்குந் தோறுந்தான் நயந்தரும். பின்னர் மாயமாய்ப் பறந்துபோம். ஆகலான் உண்ட போழ்துதான் இனிக்கும். அஃதும் ஒரு புலனுக்கு மட்டுந்தான் இன்பந்தரும். ஆனால் பின்னையதிலுள்ள தேனோ எஞ்ஞான்றும் இனிக்கும். எல்லாப் புலன்களை

யும் இன்புறுத்தும். இம்மட்டோ! அறிவைப் தழைக்கச் செய்து, செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்குந் தகையது. ஆன்மாவையும் இன்புறுத்துவது. அமர நிலைபளிக்கிடும் ஆரமுதினும் இனியது. பிறவாநெறிப் பெருஞ் செல்வப் பேற்றை அளிப்பது. மற்றும் பின்னிக் கலந்து பேரின்பமுறும் பெருவாழ்வுந் தருவது. முன்னையதை, வாயால் மட்டுந்தான் மாந்தலாம். ஆனால் இதனைக் கண்ணாலும் உண்ணலாம். காதாலும் உண்ணலாம். வாயாலும் உண்ணலாம். மனத்தாலும் உண்ணலாம். அறிவாலும் உண்ணலாம். எவ்வளவு வேண்டுமானாலும் பருகலாம்! பருகலாம்! பருகிய ஞான்றே அருநோய்களெல்லாங்கெடும். ஆருள் தரும். ஆனால் அதுவோ அளவுக்கு மிஞ்சினாற் கசக்கும். அதிலுள்ள ஆசையைத் தளர்க்கும். பெரும்பிணிவாய்ப் படுத்தும். மற்றும் உண்ட போதன்றி ஒருபோதும் இன்பந்தராது. இதுவோ, "நினைக்குந்தொறும் காண்டொரும் பேசுந்தொறும் எப்போதும்" இன்பந்தருவது. மற்றும் அதனைத் தொட்டாலும் இனிக்காது. அங்கையிற் பட்டாலும் இனிக்காது. பூவில் இருக்கும்பொழுதும் இனிக்காது. நாவிற் பட்டாற்றான் இனிக்கும். ஆனால் இவ்வணியார் அம்பலத்தில் வளரும் அரவிந்தத்திலுள்ளதோ, கண்குளிரப் பார்த்தாலும், அகங்குளிர நினைத்தாலும், வாய் குளிரச்சொன்னாலும், செவி குளிரக்கேட்டாலும், மெய்குளிரக் கைகுளிரப் பரிசித்தாலும், எஞ்ஞான்றும் இத்தனைக்குந் தித்திக்கும் இனித்த சுவைத்தேன்.

இன்னும், மற்ற பொருள்களிலுள்ள இனிப்பெல்லாம், காலம் அளவு முதலியவற்றாற் கட்டுண்டிருப்பது. ஆனால் இதுவோ காலங்கடந்தது. எல்லையில்லாதது. மிகுந்த இனிப்புடையது. இந்தகைய அழிவில்லாத ஆனந்தத் தேனைச் சொரியும் தில்லைத் தாமரை யாது? திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடனஞ்செய்கின்ற நமது நடராஜ ராஜ வள்ளலாரது, "எழுதரிய மறைச்சிலம்பு கிடந்துபுறத்தலம்ப வன்ப ரிதயமென்னுஞ், செழுமலரோடையின் மலர்ந்து சிவானந்தத் தேன்றதும்பு தெய்வக் கஞ்ச" மாகிய குஞ்சித பாதாரவிந்தமே யாகும்.

வீரகாகளம்.

(வெற்றி வீரன் எழுதுகிறார்.)

உலகத்திலே இதுவரை எத்தனை கோடி மக்களோ பிறந்து பிறந்து இறந்து போயினர். அவர்களுள் சிலருக்கே சரித்திரம் எழுதப்பட்டிருக்கின்றது. மற்றவர்களின் பெயர் போனவழி தெரியவில்லை. காற்றோடு காற்றாக மண்ணோடு மண்ணாகப் போய் விட்டார்கள். கூர்ந்து கவனித்துப் பார்த்தால் வீரர்களுக்கே சரித்திரங்கள் எழுதப்படுகின்றன. "வீரம்" என்றால் கத்திகேடயந் தாங்கிப் போர் முனையில் நின்று எதிரி படையை வெட்டிச் சாய்ப்பதென்று கருதுகிறார்கள். அதுசரியல்ல. "வீரம்" என்றால் ஒருவன் ஒரு கொள்கையைக் கொண்டு அதனைச் சாதிக்க முயன்று, செல்லும் வழியில் என்ன இடையூறு வரினும் களைக்காமல் பயப்படாமல் கடைசி வரை சென்று வெற்றி பெறுவதாகும். முந்தின காலத்திலே வீரர்கள் புறப்படும்போது முன்னாலே ஒருவன் ஒரு வாத்தியத்தை ஊதிக்கொண்டு செல்லுவான். அதற்குப் பெயர் காகளம். அப்படியே இப்போது பழைய வீரர்கள் புறப்படப் போகிறார்களாதலால் நான் வீரகாகளத்தை யெடுத்து முழக்கப் புறப்பட்டேன்.

*　　　*　　　*

தமிழ் நாட்டிற் பிறந்த மக்கள் அப்பர் சுவாமிகளை அறிந்தேயிருப்பர். அதிலும் சைவ குலத்தில் பிறந்தார் அறியா திருப்பாராயின் அவர் அக்குலத்திற் குரியா ரல்லர். எனது அப்பர் சுவாமிகளைப் பலரும் "ஒரு சைவ சமயாசாரியர்" என்றும் "அவரொரு சிவனடியா ரென்றுமே கருதி யிருக்கின்றனர். ஆனால் அவரொரு

சுத்தவீரர்! வீராதிவீரர்! வீரசிகாமணி! சமணசமயந் துறந்து சைவசமயத்தை மீண்டுமடைந்த இப்பெருமானைச் சமணம் புக்க அரசனும் சமணர்களும் படுத்திய பாட்டுக்கு அளவேயில்லை. இதொரு புறமிருக்க, நமது நாவுக்கரசர் கைலாயத்திற் சிவபெருமானைக் கண்டு வணங்குவதெனத் தீர்மானித்துக் கைலைநோக்கிநடந்தார். கால் தேய்ந்தது; கையால் நடந்தார்; கை தேய்ந்து போயிற்று; மார்பால் ஊர்ந்தார்; மார்புந் தேய்ந்தது; அங்கப் புரட்டமாக உருண்டார்; உடம்புந் தேய்ந்தது என்புந் தேய்ந்தது. அப்படியே அயர்ந்து சரீரத்திலுள்ள செயல் முற்று நீங்கக் கிடந்தபடியே கிடக்கும் நிலையைப் பெற்றார். அப்போது ஒரு முனிவர் எதிரே தோன்றி, "அப்பா! கைலையாவது! மனிதன் பார்க்கிறதாவது! இதற்கேன் இவ்வளவு கஷ்டப்பட்டாய்! திரும்பிப் போகலாம்" என்று கூறினார். அப்பர் சுவாமிகள் அதனைக் கேட்டுத் திரும்பினாரா? இல்லை. இந்தக் காலத்து சுவாமிகளாயிருந்தால் வெகு நாளைக்கு முந்தித் திரும்பியிருப்பர். ஆனால் நமது அப்பர்-கையுங் காலும் நெஞ்சும் முதுகும் வெள்ளெலும்புங் கூடத் தேய்ந்து ஊனுடலின் செயலற்றுக் கிடக்கும் நாவுக்கரசர்—தமது உள்ளத்தின் கண்ணே வேறொன்றுக்கும் இம்மியும் இடங்கொடாமல் சுற்றவர் விழுங்குங் கற்பகக் கனியாம் சிவபரம்பொருளுக்கு நெஞ்சத்தை இடமாவைத்த வாகீசப் பெருந்தகையார்—என்ன பதில் சொன்னார்? தெரியுமா? "என்னை ஆளுகின்ற சிவபெருமானைக் கைலாயத்திற் கண்டாலல்லது எப்போதாவது மாண்டு போகிற இந்த உடலைக்கொண்டு மீண்டு போக மாட்டேன்" என்று கூறினார். என்ன வீரம்! இவரன்றோ வீரர்! உடம்பே அழிந்தாலும் யாது போயினும் யாது நேரினும் கொண்ட கொள்கை சித்தியாகாதவரை விடுவதில்லையென்ற கொள்கையைக்கொண்ட வீரர் குழுவில் தலைமை வகிப்பவர் நமது அப்பர் சுவாமிகளன்றோ?

* * *

அரிச்சந்திர சக்ரவர்த்தியை அறியாத ஹிந்து உலகத்திலேயில்லை. ஆனால் அவருடைய வீரத்தை உண்மையாக அறிபவர் மிகச்சிலரேயாவர். அரிச்சந்திரன் ஒரு சக்ரவர்த்தி. உலகத்தா

ரும் உலகத்தை யாளும் பல்லாயிரம் அரசர்களும் அவனுடைய ஆணை வழியே நடந்தனர். ஆனால் தான் சொன்ன வாக்கை—சத்தியத்தை—நிறைவேற்றுவதற்காக அவர் பட்ட கஷ்டம் அம்மம்ப! சொல்ல முடியாது. "ஒரு பொய் சொன்னால் போதும்; வேறொன்றும் வேண்டாம்" என்று விசுவாமித்திரன் என்ன சொல்லியும் அவர் கேட்கவில்லை. உலகம் புரண்டே போனாலும் சரி. நான் இறந்தாலும் சரி. என்னைச் சித்திரவதை செய்தாலுஞ் சரி. சத்தியந் தவற மாட்டேன்" என்றுபிடிவாதங் கொண்டார். அதற்காக —ஒரு பொய் சொல்ல முடியா தென்றதற்காக—சத்தியத்தைத் தன் கடைப்பிடிப்பேன் என்றதற்காக—சக்ரவர்த்திப் பதவியை இழந்தார்! நாட்டை இழந்தார்! நகரத்தை இழந்தார்! பொன்னை இழந்தார்! மற்றைப் பொருள்களை இழந்தார்! உற்றாரை இழந்தார்! நேசர்களை இழந்தார்! சதுரங்க சேனையை இழந்தார்! அருந்ததி போன்ற சந்திரமதியாம் மனைவியைப் பிரிந்தார்! அருங்குமாரனையும் பிரிந்தார்! நாடு நீங்கிக் காடு புக்கார்! தன் பெருமைநீக்கி அடிமையானார்! தொண்டமானா யிருந்த மன்னன் தோட்டியுமானார்! பிணமுஞ் சுட்டார்! என்ன தவறியும் சத்தியந் தவறினாரில்லை. இவரே உண்மையின் பெருமையை நிலைநிறுத்திய உத்தம வீரர்! பிடித்த பிடியை விடாது சாதித்த பெற்றியாளர்! "உண்மையைப் பிடி" யென்ற வாக்கியத்திற் கிலக்கியமாக நின்று சாதித்த சிங்கவேறு! இம்மாதிரியான—உறுதியுள்ள—தைரியமுள்ள—தன்மதிப்புள்ள—சத்தவீரர்கள் இப்போது தேவை. வருக! வருக! மாநிலமுய்ய வருக! அரிச்சந்திர பூபதி! உனது வரவை உலகம் என்றென்றும் விரும்பி நிற்கின்றது.

* * *

கர்னனை யறியாதார் யாருமில்லை. "கொடைக்குக் கர்னன்" என்று பெயர் வழங்குகிறது. உலகத்திலுள்ள எது எப்படியாயினும் கேட்டவர்க்கு இல்லை யென்னாது கொடுத்தல் ஒன்றுதான் அவனுடைய லக்ஷியம். எத்தனையோ பேருக்கு என்னென்ன பொருளையோ வாரி வாரி வழங்கினான். கடைசியாக அருச்சுனனுடைய

அம்பினால் அடிபட்டு உடம்பு முழுமையும் ரத்த மயமாக இருக்கிறது. கூர்மையான அம்புகள் பாய்ந்து உடல் தொளை தொளையாகத் தொளைக்கப்பட்டிருக்கிறது. அசையமுடியவில்லை. கையிலிருந்த வில்லையும் அம்பையும் கீழேபோட்டு விட்டுத் தேர்த்தட்டில் செயலற்றுப் படுத்துவிட்டான் கர்னமகாராஜன். இந்த ஆபத்தான நிலையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஒரு பிராமண வேடங்கொண்டு, ஆவிபோ நிலையிற் கலங்கி அகத்ததோ புறத்ததோவென அறிய முடியாது கிடக்கின்ற கர்னனிடத்திற்கு வந்து "மிகக்கஷ்டமுறுகிறேன் ஏதாவது யாசகங் கொடு" என்று கேட்டார். யாசகம் என்றவுடனே சிங்கங் குட்டியைப் போல் உற்சாகங் காட்டினான்; கேட்டதெல்லாம் கொடுக்கக்கூடிய நிலையில் அப்போதில்லாமைக்கு வருந்தினான்; "தரக்கூடியதைக் கேளும்" என்று கூறினான். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் "உன்னுடைய புண்ணிய மனத்தையும் தாரைவார்த்துத் தருக" என்றார். இதைக் கேட்டவுடன் மகிழ்ந்து தன்மார்பில் பதிந்திருந்த அம்பொன்றைப் பிடுங்கி அதன் வாய்வழி வந்த ரத்தத்தைத் தாரை நீராக வார்த்துத் தான் இயற்றிய புண்ணிய மனத்தையும் தத்தஞ் செய்தான். அதனைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா "ஏ கர்னனே உனக்கு வேண்டுவதைக்கேள் தருகிறேன்" என்றார். கர்னன் எதைக்கேட்டான்? தெரியுமா? தன்னைக்கொன்ற அருச்சுனன் இறக்க ஒரு அம்புகொடு என்று கேட்கவில்லை; தான் பிழைக்கவேண்டுமென்று கேட்கவில்லை; உயிருக்குயிரான துரியோதனன் வாழவேண்டுமென்றுகேட்கவில்லை. தனக்குமோக்ஷம் வேண்டுமென்றுகூடக் கேட்கவில்லை. வேறென்ன கேட்டான்? இனிமேலும் எனக்குப் பிறப்புக்கிடைத்தால், "ஏழேழு பிறப்பும் இல்லையென் றிரப்போர்க்கு இல்லையென்று உரையா இதயம் நீ அளித்தருள்" என்று கேட்டான். பார்த்தீர்களா! இவனுடையவீரம் எப்படியிருக்கின்றது? இந்தக் கர்ன மகாராஜன் ஒரு பெருங்கொடை வீரன்! யாது நேரினும் உயிரே போயினும் உலகம் அழியினும் அவசியமில்லை. இல்லை என்பாருக்குக் கொடுத்தால் போதும். இந்த ஒரேஎண்ணத்தைக் கொண்டான். இதுதான் சுத்த வீரனின் லக்ஷணம்!

பழமொழிக் களஞ்சியம்.

(முதுமொழிக்காஞ்சியார் எழுதியது.)

"அவனன்றி ஓரணுவும் அசையாது" இது ஒரு சரியான பழமொழி. இந்தப்பெரிய பூமண்டலத்திற் பிறந்து வளர்ந்து இறந்தொழிந்து போகிற மக்களால், இறைவன் திருவருளின்றிச் சிறு துரும்பைக்கூட அசைக்கமுடியாது. எல்லாஞ் சிவன்செயல். இந்த சங்கதி சில அறிவாளர்க்குந்தான் தெரிகிறது. தெரிந்து கொண்டவர்களும் சில சமயங்களிற்றான் நினைந்துக்கொள்கின்றனர். அதிலும் மிகச்சிலர்தான் அநுட்டானத்தில் வைத்துக்கொள்ள முடியும். அவனுடைய அருள் இல்லாவிட்டால் கண் காணாது; காது கேட்காது; வாய் பேசாது; மூக்கு மணவாது; கை கால் உடம்பு ஒன்றும் அசையாது; உயிரோடு செத்தபிணமாக வேண்டியதுதான். உலக மாயையானது வந்து மனிதனுடைய அகக் கண்ணை மறைத்துப் பொட்டையாக்கிவிடுகிறது. ஆதலால்தான் உலகத்திலுள்ள மனிதர்கள் கடவுளை மறந்துவிட்டுத் தன்னுடைய பணத்தைக்கொண்டு—பலத்தைக்கொண்டு—செல்வாக்கைக்கொண்டு—சாமர்த்தியத்தைக்கொண்டு எல்லாஞ் செய்யலாமென்று கருதி அகங்காரங் கொண்டு ஏழை யெளியவரின் உயிரை வாங்கிவிடுகின்றனர். என் செய்வது! அவனன்றி ஒன்றும் அசையாதென்ற எண்ணம் எப்போது மக்களின் மனத்தில் உதிக்குமோ? அந்நாளே நன்னாள்!

* • •

நூல்களிலே மனிதனுக்கு வயது நூறென்று சொல்லப்பட்டது. நமது முன்னோர்கள் அப்படியே இருந்தார்களென்று கேள்விப் படுகிறேன். அது பழய கதை; இப்போது இந்தியாவில்

நிரவல் வயது மனிதனுக்கு இருபத்து மூன்றுதான். பிஞ்சிலே பழுத்து உதிர்ந்து போகிற காலம் இது. இந்தக் காலத்திலே மனிதன் கேடும் அநியாயமும் கொலையும் அதிகமாகச் செய்கிற படியினாலே கடவுள் ஆயுளைக் குறைத்து விட்டார்போ லிருக்கிறது. இந்தச் சொற்ப வாழ்க்கையில் என்ன தடபுடல் பண்ணுகிறான் ஐயா! உலகத்துக்குந் தான்தான் சக்கிரவர்த்தி யென்கிறான்; ஏழைகளை அடிக்கிறான்; உதைக்கிறான்; பொய்யும் புரட்டும் மோசமும் செய்து பணம் சம்பாதிக்கப் பார்க்கிறான். எவனாவது மானம் மரியாதையைப் பேணி வாழ்ந்தால் அவனைத் துன்புறுத்துகிறான். ஒருவன் தத்தித் தத்தி மேலேறப் பார்த்தால் அவனைத் தட்டிப்பமிழ்த்தப் பார்க்கிறான். என்னே உலகத்தில் மனிதர்கள் செய்கிற அநியாயம். மனிதன் பிறக்கிறதும் வளர்கிறதும் வாழ்கிறதும் இன்பதுப்பதும் துன்பப்படுவதும் இறப்பதும் செப்பிடு வித்தை மாதிரி யிருக்கின்றன. இப்போதோ கொஞ்சநேரஞ் சென்றோ இராத்திரிக்கோ நாளைபோ நாளை நின்றோ அல்லது அடுத்த நாட்களிலோ நிச்சயமாக இறந்து போகவிருக்கிற இந்த அற்பமான வாழ்க்கையில் என்ன தடபுடல்! என்ன டம்பம்! என்ன அகங்காரம்! என்ன திருவிளையாடல்! என்ன ஆடம்பரம்! "அரைக்காசிலே கலியாணமாம் அதிலேசற்றே வாணவேடிக்கை"

* * *

உலகத்திலே ஆயிரமாயிரம பெரியோர்கள் அவதாரஞ் செய்தார்கள். ஆயிரக்கணக்கான புராணிகர்களும் புலவர்களும் பிறந்திருந்தார்கள். கோடிக்கணக்கான புத்தகங்களை யெழுதி வைத்தார்கள். பல நூறு பக்தர்கள் தாங்களே நடந்து காட்டினார்கள். இத்தனையும் கேட்ட—படித்த—பார்த்த உலகத்து ஜனங்கள் உண்மை யுணர்ந்து நல்ல வழியில் நடக்க முன்வரவில்லை. கொஞ்ச நாள்தானே உலகத்திலே வாழப்போகிறோம்; கிடைப்பதற்கு அருமையான மனிதப் பிறப்புக் கிடைத்திருக்கிறதே; இது போனால் நாயாகவோ நரியாகவோ கழுதையாகவோ பன்றியாகவோ செக்கு மாடாகவோ யாதாகப் பிறக்கப் போகிறோமோ தெரியவில்லையே

யென்று பதறிக் கடவுளிடத்து முறையிடுவாரைக் காணவில்லை.
எத்தனை யுபந்யாசங்களைக் கேட்டாலும், எத்தனை புத்தகத்தைப்
படித்தாலும், என்ன நியாயம் பேசப்பட்டாலும் அநேகம் மக்
கள் நின்ற நிலையைவிட்டு அசைவதில்லை. "ஆயிரங் கட்டுக் கர்பு
தவிடுபொடி யானாலும் மன்னன்காளை பதறி அடி எடுத்து வைக்
காது"

* * *

ஜனங்கட்காக வேலை செய்ய முன்வருபவர்கள் வேலையின்
பயனை எதிர்பார்த்து வாயைத் திறந்து கொண்டிருத்தல் கூடா
தென்று சுவாமி விவேகாநந்தர் கூறுகிறார். ஆம். அது உண்மை
தானே! ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கும்போது "லட்சம் ரூபா
லாபம் வர வேண்டும்" என்று இரவு பகலாக எண்ணமிட்டுக்
கொண்டிருக்கு மொருவனுக்கு, அப்படியே லாபம் வந்துவிட்டால்
சந்தோஷமாகவே யிருக்கும்; அதற்குப் பதிலாக ஐம்பதாயிரம்
நஷ்டம் வருமானால் அவனுடைய உயிர்கூடப் போய்விடும்; ஒரு
வாறு பிழைத்திருந்தாலும் மனமொடிந்து செயலற்று மூளைகலங்
கிக் கிறுக்குப்பிடித்து நடைப் பிணமாகக் கண்டார் வெறுக்கத்
திரிவான். இதற்காகத் தான் பெரியோர்கள், "பற்றற்று வேலை
செய்; புளியம் பழத்தின் தோடுபோல உலக வாழ்க்கையில் பற்
றற்றிரு; வேலை செய்யவேண்டியதே உன்னுடைய கடமை; அத
னல் உண்டாகும் வெற்றி தோல்வியை லக்ஷியஞ் செய்யாதே; பய
னைக் கருதிக் கவலைப்பட்டுச் சாகாதே." என்று உபதேசிக்கிறார்
கள். நியாயத்தையும் தருமத்தையுங் கைக்கொண்டு, கடவுளை
நம்பிக் கருணைநிறைந்த நெஞ்சத்தோடு ஜனங்கட்கு உபகாரஞ் செ
ய்ய முன்னின்றால் போதும்; அதற் கென்ன விருக்கின்றது? நாம்
வேலை செய்து கொண்டேயிருப்போம். "ஊதுகிற சங்கை ஊதி
னல் விடிகிறபோது விடியட்டும்"

சதங்கை யொலி.

நாமென்ன செய்யவேண்டும்?

காளிது ஆனிமீ௴ கறுவ நமது மாணிக்கவாசகப் பெருமான் ஜோதியிற் கலந்த தினமாகும். அன்று விபூதி பூசுகின்ற ஒவ்வொருவரும் அப்பெருமானை நினைத்துக் கட்டாயம் பூஜித்தல் வேண்டும். பூஜித்தல் என்றால அறுபத்து மூவர் திருமடங்களில் திருவமுது உண்டு மகிழ்வது மட்டுமன்று! அறுபத்து மூவர் குருபூஜை மடங்கள் எதற்காக உண்டாக்கப் பட்டனவோ அதன்படி ஒழுங்காக நடைபெறவில்லை. சில விடஙகளில் சோற்று மடங்களாகவே நடைபெறுகின்றன. அம்மடங்களின் சொந்தக்காரர்கள் கவனித்தல் வேண்டும். அம்மடங்கள் நாயன்மார்களுடைய பக்திையயும் அவர்களுடைய பெருமைகளையும் உலகத்தாருக்கு எடுத்துச் சொல்லி எல்லாரையும் மெய்யடியா ராகுமாறு செய்வதற்கேற்பட்ட ஸ்தாபனங்களேயாகும். அந்த மடங்கள் சரியானபடி தொண்டு செய்தல் வேண்டும். மாணிக்கவாசகப் பெருமான் அன்புருவாயமர்ந்தவர். பக்தி சொரூபம். பரம்பொருளோடு இரண்டறக்கலந்த பெருந்தகை. திருவாசகத் தேனைப் பரப்பிய பக்திச் செல்வர். அவருடைய முழக்கம் ஆனி மீ௴ கறுவ உலகெங்கும் முழங்கவேண்டும். அந்நாளன்று நம் நாட்டுச் சங்கங்கள் அப்பெருமானுக்கு விழாக்கொண்டாட வேண்டும். சிவநேசச் செல்வர் ஒவ்வொருவரும் மனைவி மக்களோடு அப்பெருமானது சரித்திரத்தைக் கேட்டின்புறுதல் வேண்டும். அவரருளிய திருவாசகத் தேனையுண்டு நெக்குநெக்குருகுதல் வேண்டும். ஒவ்வொரு சைவர் வீட்டிலும் அந்நாளில் திருவாசக மலர் மலர்ந்து நறுமணங் கமழவேண்டும். இவையே சைவர் மணிவாசகருக்குப் பக்தி செலுத்தும் முறையாகும். திருவாசகத்தில் ஒருபாட்டாவது ஒருவரியாவது அத்தினத்தில் பாராயணம் செய்யாமல் தன்னைச் சைவனென்று கூறிக்கொள்வது வெட்கமேயாகும்.

பொது.

—o—

எங்கும் கடவுள்:—அமெரிகா தேசத்தில் ஒரு குடியானவன், தன் வீட்டின் கண் ஒரு நாள் இரவில் வேறொரு மனிதனோடு பேசிக்கொண்டிருந்தான். அவ்விருவரும் அந்தக் குடியானவனின் முதலாளியைக்கொன்று அவனுடைய பொருளைக் கவர்ந்து கொள்வதற்கு வேண்டியவற்றை யெல்லாம் பேசி முடிவு செய்தார்கள். அக்குடியானவனின் எட்டு வயதுள்ள பெண் ஒரு அறையிற் படுத்திருந்தது. தூக்கம் வாராததால் விழித்துக்கொண்டு தகப்பன் பேசுவதைக்கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது. கொலைப்பேச்சையும் சூழ்ச்சிகளையும் கேட்டு அப்பெண் பயந்து திடுக்கிட்டு விட்டது. பொல்லாத தகப்பன் யோசித்தபடி கட்டாயம் செய்தே தீர்வானாதலால் மகா பெரிய கடவுளிடத்தில் முறையிட்டாலல்லது முடியாதென்று கருதி "இந்த அபாயத்தை நீக்கவேண்டுமென்று நடந்த விஷயத்தை விரித்தெழுதி மேலுறையில் "தேவலோகத்திலுள்ள கனந்தங்கிய கடவுளுக்கு" என்று எழுதித் தபாலில் போட்டு விட்டாள். அதனைத் தபாலதிகாரிகள் பிரித்துப்பார்த்து போலீசுக்கு அனுப்பினார்கள். போலீசார் விசாரித்து அந்த முதலாளி உயிரைக் காப்பாற்றினார்கள். முதலாளி குடியானவனுடைய பெண்ணைத் தன் பெண்ணாக சுவீகாரஞ்செய்து கொண்டான். கடவுள் எங்குமிருக்கிறார் என்பதற்கு வேறு சாக்ஷி வேண்டுமோ?

எத்தனை பாஷைகளில் எவ்வளவு பிரதிகள்:—"பிரிட்டிஷ் அண்டு பாரின் பைபில் சொஸைட்டி" என்னும் கிருஸ்தவ சங்கத்தார் தங்களுடைய வேத புத்தகமாகிய பைபிலை இதுவரை உலகத்தில் ஐந்நூற்றைம்பது பாஷைகளில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இதுகாறும் எண்பத்தாறு லட்சம் பிரதிகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஆஹா! என்னே கிறிஸ்தவரின் முயற்சி! இத்தனை லட்சம் பிரதிகளைச் செலவிட எத்தனை ஆயிரம் பாதிரிகள் வேலை செய்தல் வேண்டும். கிறிஸ்தவர் தமது சமயம் உலக முற்றும் நிறைந்து விடவேண்டுமென்று பெருமுயற்சி செய்து வருகின்றனர். கிறிஸ்தவ சமயமில்லாத நாடு இதுகாலை இல்லை. நமது நாட்டில் சமய நிலை யெப்படி யிருக்கின்றது? நமது வேதங்கள் எத்தனை மொழிகளில் வெளியாகியிருக்கின்றன? எத்தனை பிரதிகள் விலையாகியிருக்கின்றன? எத்தனை பேர் அதனைப் படிக்கின்றனர்? எத்தனை சங்கங்கள் இப்படிப் பிரசாரஞ் செய்கின்றன. இச்சமோதிரி முயற்சியில் தலைப்படுபவர்க்கு எத்தனை பணக்காரர் பொருளுதவி செய்கின்றனர்? எல்லாம் வெட்கம்! வேதத்தைப்பிறர் படிக்கப்படாதென்றும் அது தங்கள் சிறவாட்டுச்சொத்தென்றும் கூறுகிற ஆசிரியர்கூட இன்னும் நம்முள் இருக்கின்றனர்!

கொல்லாமைப் பிரசாரம்:—சென்ற மூன்றுமாதகாலமாக நமது திருக்கூட்டத்தார் பலவூர்கட்குஞ்சென்று பிரசாரஞ் செய்ததன் பயனாகப் பல்லாயிரம் ஆடு கோழிகளின் உயிர் தங்கியிருக்கின்றது; இன்னும் உயிர்ப்பலி நடைபெறுமிடங்களையறிந்த நண்பர்கள் ஏழைப்பிராணிகளிடம் கருணை கொண்டு இடம் தேதி வெட்டப்படும் ஆடு கோழிகளின் உத்தேசத்தொகை முதலியவற்றை முன்னர்க்கூட்டியே தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம் என்றும், இந்த பிரசாரத்தில் ஆங்காங்குள்ள வாசகசாலைகளும் சங்கங்களும் அபிமானிகளும் புரிந்த பேருதவிக்கு நன்றி பாராட்டுகிறோமென்றும் காரைச்சிவனடியார் திருக்கூட்டத்தின் காரியதரிசி எழுதுகிறார்.

சைவ சமய சாரம்.

இது தமிழ்நாட்டுத் தவப்பயனாக விளங்கும் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரால் எழுதப்பெற்றுக் காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தாரால் அச்சிடப்பெற்ற புத்தகமாகும். இதில் சைவ சமயத்தின் உண்மையும் பெருமையும் பல மேற்கோள்களுடன் விளக்கப்பட்டிருக்கின்றன. உயர்ந்த காகிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களில் அச்சிடப்பெற்றிருக்கிறது. ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய புத்தகம் இது.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணா ஒன்று.

நூறு புத்தகங்கட்குக் குறையாமல் வாங்கினால் நூற்றுக்கு இருபது தள்ளுபடி.

ஸ்ரீமான் முதலியாரவர்களால் எழுதப்பெற்ற,

தேச பக்தாமிர்தம்.	௧—0—0
என்கடன் பணிசெய்து கிடப்பதே.	0—௮—0
மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்	0—௮—0
நாயன்மார் என்ற புத்தகம் (அச்சில்)	0—௫—0

தபாற்கூலி வேறு.

தந்திவிலாசம் "**Stores**"

இந்தியன் ஸ்டோர்ஸ்,

காரைக்குடி.

சொ. முருகப்ப செட்டியாரால், காரைக்குடி தனவைசிய ஊழியன் பிரஸில் அச்சியற்றிப் பிரசுரஞ் செய்யப்பெற்றது.